பொழுது - 37
மே 2012

# விடியல் The Dawn

மாத இதழ்



தமிழறிஞர் வ.உ.சி

# விடியல்

## The Dawn

*மாத இதழ், பொழுது – 37*
*மே, 2012*

*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**முனைவர் ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்

*வெளியீடு:*

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA
Knowledge is Power

## தமிழ்த்துறை

**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி**
**(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு – 637 215**
**நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.**
**vidiyalmagazhine@gmail.com**
**ksrcasthamizh.blogspot.com, ksrcas.edu**

# உள்ளடக்கம்

## கட்டுரைகள்

*அதிவேகம்* 02,
*மனித மூளை* 03,
*தமிழறிஞர் வ.உ.சி* 08,
*செஞ்சிலுவைச் சங்கம்* 12,
*புகைப்பிடித்தல்* 15
Escherichia coli 19
John Keats 20

## கவிதைகள்

*அன்பு, கார்மேகம்* 12
*என்னைப் போலவே* 04

## அறிவிப்பு

*பன்னாட்டுக் கருத்தரங்கம்* 07

## சங்கச் சாரல் - 03

*வெறுப்பும் விருப்பும்* 05

## சரித்திரக் கட்டுரை - 05

*ஆக்ரா கோட்டை* 21

*பின் அட்டை ஓவியம்*

**சௌந்தர்யா,**
இரண்டாமாண்டு துகிலியல் மற்றும்
ஆடை வடிவமைப்புத்துறை

# அதிவேகம்

**வா.முகேஷ்குமார்**

முதலாண்டு வேதியியல் துறை

வெற்றிடத்தில் ஒளியின் திசை வேகம் விநாடிக்கு 29,97,92,458மீட்டர் ஆகும். இதனை நியுட்ரினோ விஞ்சிவிட்டது. சூரியனில் 4,000டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் ஹைட்ரஜனும் நைட்ரஜனும் சேரும்போது ஹீலியமும் நியுட்ரினோவும் வெளிப் படுகின்றன.

நியுட்ரினோ என்ற வார்த்தைக்கான பொருள், 'சிறிய சார்புருதியற்ற ஒன்று' (small neutral one) என்பதாகும். அதாவது, மின்காந்த விசையால் (Electromotive Force) எந்தப் பாதிப்பும் அடையாமல் சார்புருதி அற்ற ஒரு பொருள் என்று கூறலாம். இது அணுவினின்றும் சிறிய பொருள் என்றும், இதன் திரண்ட நிலை (mass) ஏறக்குறைய பூஜ்ஜியம் என்றும் கூறப் படுகிறது. 1930ஆம் ஆண்டு வுல்ஃப்காங் பாலி (Wolfgang Pauli) என்ற இயற்பியல் மேதையால், இப்பொருளின் முதல் வடிவம் கோட்பாடாக அறிவிக்கப் பட்டது. பின், 1956இல் கிளைட் கோவான், பிடெரிக் ரெயின்ஸ் ஆகியோரால் நியுட்ரினோ கண்டு பிடிக்கப்பட்டது. தற்போது இந்தப் பொருள், ஒளியைவிட வேகமாகப் பயணிக்க வல்லது என்று ஐரோப்பிய அறிஞர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**Wolfgang Pauli**

நியுட்ரினோ எந்தப் பொருளையும் ஊடுருவிச் செல்லக் கூடிய திறன் கொண்டது. அதனால், ஜெனிவாவில் உள்ள CERN என்ற ஆய்வுக் கூடத்தில் 1300 மெட்ரிக் டன் எடையுள்ள இயந்திரம் (OPERA) கொண்டு நியுட்ரினோவைப் பூமிக்குள் செலுத்தினர். ஏறத்தாழ 16,000 நியுட்ரினோக்களின் வேகத்தை ஆராய்ந்தனர். 2.3 மில்லி செகண்ட் நேரத்தில், 730 கிலோமீட்டர் பயணித்த நியுட்ரினோ, ஒளியைவிட சுமார் 60 நானோ செகண்ட் அதிக வேகத்தில் சென்றதாக அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. இதை அதி நவீன கருவிகள் மூலமாக, நுணுக்கமான கடிகாரத்தின் துணை கொண்டு கண்டுபிடித்திருக்கின்றனர்.

Ж


# மனித மூளை

**எல்.கே. ஆதித்தன்**
இரண்டாமாண்டு ஆங்கிலத்துறை

மனித மூளையின் எடை 1.4 கி.கி. இருக்கும். மூளையின் நிறம் சாம்பல் ஆகும். குழந்தை பிறந்தது முதல் ஓர் ஆண்டு வரை உடலின் எடையில் மூன்றில் ஒரு பகுதியாக மூளையின் எடை இருக்கும். உடலின் அனைத்து இயக்கங்களுமே மூளையின் ஆணைப் படியே நடக்கின்றது.

மூளைக்கு ஆக்ஸிஜன் நான்கு நிமிடங்கள் வரை கிடைக்காவிட்டால் மூளை செயலிழந்துவிடும். மூளைக்கு எட்டு முதல் 10 நிமிடங்கள் வரை இரத்த ஓட்டம் கிடைக்காவிட்டால் இறக்க நேரிடும். மனிதனுக்கு நாள்தோறும் கிடைக்கும் கலோரிகளில் 20சதவிகிதம் மூளை பயன்படுத்திக் கொள்கின்றது.

மனித உடலின் வெப்பத்தில் 40 முதல் 50 சதவிகிதம் வரை தலைவழியாகவே வெளியேறுகின்றது. நினைவாற்றல் சிறப்பாக இருக்க மூளைக்கு 10ஆயிரம் கோடி செல்கள் தேவை. மனிதன் சிந்திக்கும் வேகம் நிமிடத்திற்கு 500 சொற்கள். பேசும் போது வேகம் 100 சொற்கள். குழந்தையின் மூளை மிகவேகமாக வளரும். அதேசமயம் நம் உடலில் ஓடும் இரத்தத்தில் ஐந்தில் ஒரு பங்கு மூளைக்குச் செல்கின்றது. மூளையின் மடிப்புகளே அறிவுக் கூர்மையைத் தீர்மானிக்கின்றன. நாம் தூங்கும் போதும் மூளை விழிப்புநிலையிலேயே இருக்கும்.




மனித மூளையில் ஆறு கிராம் தாமிரச்சத்து உள்ளது. பெண் களைவிட ஆண்களுக்கு மூளை வடிவ அளவில் பெரியது. மூளையை 22 விதமான எலும்புகள் பாதுகாக்கின்றன. மூளைக்குத் தேவையான 100கோடி நியூரான்கள் நான்கு வயதுக்குள் கிடைத்து விடுகின்றன. உலகிலேயே அதிக எடையுடையதாக 2.3கி.கி. எடை யுடைய மூளை கண்டறியப் பட்டுள்ளது.

Ж

# என்னைப் போலவே

கே. கீர்த்திபிரியா
முதலாண்டு வேதியியல்துறை

*"சூழ்ச்சி வலையில் சிக்கவைத்து*
*எதையும் எனக்குக் கிடைக்கவிடாமல்*
*செய்யும் அவர்களை எனக்கு*
*மிகவும் பிடிக்கும்.*

*நம்பவைத்துக் கடைசியில்*
*கழுத்தறுப்பவர்களை எனக்கு*
*மிகவும் பிடிக்கும்.*

*நயவஞ்சகமாகப் பேசித் தன்*
*சொல்லை என்னிடம்*
*நிலைநாட்டிக்கொள்பவர்களை எனக்கு*
*மிகவும் பிடிக்கும்.*

*அதிரடியாக நுழைந்து*
*துவம்சம் செய்பவர்களைக் காட்டிலும்*
*கனிவுடன் நயமாகப் பேசி*
*நஞ்சுவைத்துக் கொல்பவரை எனக்கு*
*மிகவும் பிடிக்கும்.*

*தன் வலையில் வீழ்ந்துவிட்ட*
*இரையை அதை உணரச்செய்யாமல்*
*தன் கண்களில் காட்டிக்கொள்ளாமல்*
*உள்ளுக்குள் ரசிப்பவர்களை எனக்கு*
*மிகவும் பிடிக்கும்.*

*தப்பிக்க வழியின்றி*
*அனைத்தையும் ஒவ்வொன்றாக*
*மூடிக் கடைசியில் உரக்கச்*
*சிரிப்பவர்களை எனக்கு*
*மிகவும் பிடிக்கும்.*

*முகத்தை இறுக்கமாக*
*வைத்துக்கொண்டு*
*உள்ளுக்குள் நகைப்பவர்களை*
*எனக்கு மிகவும் பிடிக்கும்.*

*விடாத பிடிவாதத்துடன் இருப்பவரை*
*அவரின் வலுக்குறைவு*
*அறிந்து வீழ்த்துபவரை எனக்கு*
*மிகவும் பிடிக்கும்.*

*எவ்வளவோமுறை சொல்லியும்*
*தன் வழிக்கு வராதவர்களை*
*அவர்களின் வழியிலேயே சென்று*
*சமயம் பார்த்துப்*
*போட்டுத்தள்ளுபவர்களை எனக்கு*
*மிகவும் பிடிக்கும்.*

*இத்தனை பிடித்தங்களும் உள்ள*
*என்னை உங்களுக்கும் பிடிக்கும்.*
*உங்களை எனக்குப்*
*பிடித்துப்போனதுபோல."*

Ж

*சங்கச் சாரல் - 03*

# வெறுப்பும் விருப்பும்

உலக வாழ்க்கையில் ஒருவரை எல்லோரும் விரும்புவதில்லை. சிலரால் விரும்பப்படும் நபர்களை இன்னும் சிலர் வெறுப்பதுண்டு. இது உலகத்து இயல்பு. ஆனால் மனிதர்கள் இதனை உணர்ந்து செயல்படுவது இல்லை. சிலர் விருப்புடன் பேசினால் மகிழ்ச்சியடைகின்றனர்; வெறுப்புடன் பேசினால் துன்பம் அடைகின்றனர். இன்பத்தைப் பெறும் மன இயல்பை விமர்சிக்கவில்லை. ஆனால் துன்பப் படும் நபர்களை அப்படியே விட்டுவிட முடியாது. அவர்களின் துன்பங்களுக்கு மருந்து கொடுக்கவேண்டும். அம் மருந்துகள் சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றன.

முதலில், வெறுப்புக் கொண்டு தூரச்செல்லும் மனிதர்கள் யார்? அவர்களின் இயல்பு என்ன? அவர்களுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன? நம்முடைய இயல்பு என்ன? எனும் வினாக்களுக்கு விடை களைத் தேடிக்கொண்டு, வெறுப்பினால் துன்பம் அடையலாமா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

களவுக்காலத்தில் தலைவி யைச் சந்திப்பதற்குப் பல மலை களையும் பல காடுகளையும் கடந்துவந்து இன்பம் செய்தவன் தலைவன். இப்போது இருவருக்கும் இடையே மலைகளோ காடுகளோ இல்லை. எனினும் தலைவன் இன்பம் செய்வதில்லை. மாறாகத் துன்பமே செய்கின்றான்.

தலைவின் கண்ணெதிரே வேறொரு பெண்ணுடன் தலைவன் இருக்கின்றான். இந்த நிலையில் தலைவியானவள் மிகுந்த துன்பம் அடைவது இயல்பு. இந்நிலையில் தலைவியானவள் தன்னைத் தலை வன் காதலிக்கும்போது மலை களையும் காடுகளையும் கடந்து வந்து இன்பம் செய்தானே; இப் போதோ இப்படிப்பட்ட துன்பத்தைச் செய்கின்றானே என்று எண்ணித் துன்பம் அடைகின்றாள். இவளின் துன்பம் இயல்பானது என்றுதான் தோன்றும். ஆனால், சங்க இலக்கியம் இத்துன்பத்தை ஆராய்ந்து பார்த்து ஆலோசனையும் கூறுகின்றது. அவையாவன,

தலைவன் களவுக்காலத்தில் பெருமுயற்சிகள் செய்து மகிழ்வு தந்தவன். மலைகளையும் காடு களையும் கடந்துவந்து இன்பம்

செய்தவன். மலையும், காடும் பல ஆபத்துகளின் இருப்பிடங்கள். அவற் றையும் கடந்து வந்தவன். இன்று திருமணம் முடிந்து ஒரே ஊரில் இருக்கின்றான். ஆனால் துன்பம் செய்கின்றான். இங்குத் தலைவ னானவன் காலங்களுக்கு ஏற்ப மாறுவது விளங்குகின்றது.

காலங்களால் மனிதர்கள் மாற்ற மடைகின்றனர். இது ஏற்புடைய பண்பு ஆகாது. காதல் என்பது காலங்கள் கடந்தும் நிலைத்திருக்க வேண்டிய தாகும். காலங்களுக்கு ஏற்ப மாறும் தன்மையுடையதாக இருக்கக்கூடாது. எனவே, தவறு தலைவனுடையது.

தலைவிக்குத் துன்பம் செய்யும் தலைவன் வேறொரு பெண்ணிற்கு இன்பம் செய்கின்றான். இங்குத் தலைவனின் இயல்பும் அப்பெண்ணின் இயல்பும் கவனிக்கத்தக்கது.

முயன்று பெற்ற தலைவியைத் தவிக்கவிட்டவன், தாய் - தந்தையரைக் கடந்து காதலனுக்கு உட்பட்டு இன்பம் தந்த தலைவிக்குத் துன்பம் செய்தவன். இது ஏற்புடைய பண்பு அல்ல.

தன் கண்முன்னே ஒரு பெண்ணிற்குத் துன்பம் செய்து தன்னைக் கூடும் தலைவனை ஏற்கும் அப்பெண், பாதிப்புக்கு உட்பட்டு துன்பம் அடையும் அப்பெண்ணின் நிலையைச் சற்றும் சிந்திக்காதவள். பெண்ணாய்ப் பிறந்தும் பிற பெண்ணிற்குத் துன்பம் செய்பவள். இவளின் பண்பும் ஏற்புடையது அல்ல. இழிவுடைய பண்புடையவர் களாய் இருக்கின்றனர்.

இங்குத் தலைவியானவளோ காலத்தால் மாறாதவள். இன்பம் செய்தவருக்கு இன்பம் தந்தவள். துன்பம் செய்பவருக்குத் துன்பம் செய்யாதவள். இவளின் பண்பு உயர்வானதாகின்றது. மனித நிலை யிலிருந்து உயர்ந்து, தெய்வ நிலைக்கு உயர்வுபெறும் பண்பு இது.

இந்நிலையில் தாழ்ந்த இயல் புடைய தலைவன் உயர்ந்த இயல் புடைய தலைவியை விட்டு நீங்கித் துன்பம் செய்வதைத் துன்பம் என்று நோக்கலாமா? உயர்ந்த பண்புடை யவர்கள் இழிவானவர்களால் துன்பப் படுத்தப்படலாமா? உயரிய சக்திகள் பெற்ற தெய்வம் வலம் வரும்போது அத்தெய்வத்தை நெருங்குதற்கே தகுதியற்ற மனிதர்கள் விலகிநிற்பது இயல்புதானே? விலகி நிற்கும் கீழானவர்கள் பிற கீழான நபர் களுடன் மட்டும்தானே கூட்டு

வைத்துக்கொள்வர்? கீழானவர்களுக்கு உயர்வானவர்களைப் பிடிக்காதுதானே? இந்நிலையில் தாழ்ந்த இயல்புடைய அத்தலைவனின் செயல்பாட்டிற்கு இத் தலைவி ஏன் வருந்தவேண்டும்? இதனைக் குறுந்தொகையின்,

***"மலை இடையிட்ட நாட்டரும் அல்லர்***
***மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்***
***கண்ணின் காண நண்ணுவழி இருந்தும்***
***கடவுற் நண்ணிய பாலோர் போல***
***ஒரீஇனன் ஒழுகும் என்னைக்குப்***
***பரியலென்மன் யான், பண்டு ஒரு காலே"***

**(குறுந்தொகை – 203)**

என்ற பாடல் விளக்கியுள்ளது.

கடவுளை நெருங்காது தூர இருப்பவன் தலைவன். அவனுக்காக நான் வருந்தவில்லை என்பதைப் 'பரியலென்மன் யான்' என்கின்றாள். 'இவ்வளவில் இல்லாது முன்பு என்னுடன் இனிதே வாழ்ந்த வாழ்வை விடுத்து இழிவான வாழ்வைத் தேடியுள்ள அவர் பொருட்டே வருந்து கின்றேன்' என்கின்றாள். தலைவியின் இக்குணங்கள் இன்றைய வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய ஒன்று.

***சாரலில் மீண்டும் நனைவோம்...***
***முனைவர் த. கண்ணன்***
தமிழ் விரிவுரையாளர்

Ж

## <u>அறிவிப்பு</u>
## பன்னாட்டுக் கருத்தரங்கம்

வருகின்ற ஜுலை மாதம் 21 ஆம்நாள் கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) யின் தமிழ்த்துறையும் திருவையாறு தமிழ் ஐயாக் கல்விக் கழகமும் இணைந்து 'அனைத்துலகக் காப்பியத் தமிழ் என்ற பொருண்மை'யில் பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்த உள்ளன.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பின்வரும் தொலைப்பேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். கருத்தரங்க ஒருங்கி ணைப்பாளர்கள் :

***முனைவர் மா. கார்த்திகேயன்***
9894953535
***முனைவர் மு. கலைவேந்தன்***
9486742503

*மார்ச் மாத விடியல் இதழினை 'மகளிர்தினச் சிறப்பிதழாக'வும் ஏப்ரல் மாத விடியல் இதழினைக் 'கவிதைச் சிறப்பிதழாக'வும் வெளியிட்டோம். இனி, வருகின்ற ஜுன் மாத விடியல் இதழினைச் 'சுற்றுச்சூழல் சிறப்பிதழாக' வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.*

- **ஆசிரியர் குழு**

# தமிழறிஞர்
# வ.உ.சி.

**முனைவர் பெ. கணேசமுருகன்**
தமிழ் விரிவுரையாளர்

வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆட்சிக்காலத்தில் தானாதிபதிப் பொறுப்பு வகித்த சுப்பிரமணியம் பிள்ளையின் வழித்தேன்றல் வ.உ.சி.. 'வள்ளிநாயகம் பிள்ளையின் மகனார் உலகநாதன் பிள்ளையின் மகனார் சிதம்பரம் பிள்ளை' என்பதன் சுருக்கமே வ.உ.சி..

இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர். திறமையான எழுத்தாளர், ஆற்றல் மிக்க பேச்சாளர், தன்னலமில்லாத் தொழிற்சங்கத் தலைவர், துணிவுடைய சுதந்திரப் போராட்ட வீரர்.

இவரின் வாழ்க்கைச் சரித்திரமானது, இந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலைக்காக அவர் செய்த தியாகங்கள், அவரது போராட்டங்கள், அவர் அனுபவித்த துயரங்கள் இவற்றால் நிறைந்தது.

வ.உ.சி. புகழ் பெற்ற வக்கீல். அவர் தமிழ்ச் செய்யுள்கள் இயற்றியுள்ளார், கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ் மொழியில் உள்ள பல இலக்கியங் களைப் படித்து அவற்றைப் பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். சுதந்திரப் போராட்டம் குறித்தும் தமிழ் இலக்கியங்கள் குறித்தும் நண்பர் களுடன் விவாதிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர் ஆங்கில நூல்களை மொழி பெயர்த்துள்ளார்.

## வ.உ.சி. எழுதிய நூல்கள்

வ.உ.சி. இயற்றிய நான்கு நூல்களுமே கவிதைகளால் ஆனவைதான். அவை 1.மெய்யறம் 2.மெய்யறிவு 3.பாடல் திரட்டு 4.சுயசரிதை.

## மெய்யறம்-1914

'மெய்யறம்' 125 அதிகாரங் களை உடையது. ஒவ்வொரு அதிகாரமும் 10 பாடல்களைக் கொண்டது. ஒரு பாடல் என்பது ஒரு வரி மட்டுமே உடையது. மெய்யறம் 5 பகுதிகளை உடையது. முதல் பகுதி மாணவர்களுக்கானது. அதில் 30 அதிகாரங்கள் உள்ளன. இரண்டாவது பகுதி இல்லறத்தார் களுக்கானது. அதுவும் 30 அதிகாரங்கள் உடையது. மூன்றாவது பகுதியில் ஓர் அரசன்

எவ்வாறு இருக்க வேண்டும் என்று 50 அதிகாரங்களில் வ.உ.சி. விளக்கு கிறார். நான்காவது பகுதி 10 அதிகாரங்களுடன் நன்னெறி குறித்து விளக்குகிறது. கடைசிப் பகுதியில் உண்மையை அடைவது எப்படி என்று ஐந்து அதிகாரங்களில் வ.உ.சி. விளக்குகிறார்.

## மெய்யறிவு-1915

வ.உ.சி. கண்ணனூர் சிறையில் இருக்கும்போது மற்ற கைதிகளுக்கு நீதி, நெறிகளை விளக்குவார். அக்கைதிகள் இந்த அறிவுரைகள் செய்யுள் வடிவில் இருந்தால் மனனம் செய்ய எளிதாக இருக்கும் என்று வ.உ.சி.யிடம் கூறினார்கள். அவ்வாறு இயற்றப்பட்ட செய்யுள்களே மெய்யறிவு என்ற நூலாகும். அது 10 அதிகாரங்கள் உடையது. ஒவ்வொரு அதிகாரமும் 10 செய்யுள்கள் உடையது. ஒவ்வொரு செய்யுளும் நான்கு வரிகள் உடையது. இந்த நூலில் வ.உ.சி தன்னை அறிந்து கொள்வது எப்படி, நம் விதியைத் தீர்மானிப்பது எவ்வாறு, ஆரோக்கி யத்தைப் பேணும் முறைகள், மனத்தை ஆளுவது எங்ஙனம், நம் மனத்தில் தீய எண்ணங்களை விலக்கி நல்ல எண்ணங்களை ஏற்படுத்துவது எப்படி, உண்மை நிலையை அடைய என்ன செய்ய வேண்டும் என்று விளக்குகிறார்.

## பாடல் திரட்டு-1915

இந்நூல் பல்வேறு சூழல்களில் வ.உ.சி. எழுதிய பாடல்களின் தொகுப்பாகும். இது அவரது தலைசிறந்த படைப் பாகும்.

## சுயசரிதை-1946

இது இரு பகுதிகளை உடையது. முதல் பகுதி 1916-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதில் அவர் தன் குழந்தைப் பருவம், ஆசிரியர்கள், குடும்பம், சட்டக்கல்வி இவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இரண்டாவது பகுதி 1930ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதில் கோயம் புத்தூர் சிறை வாழ்க்கை, சிறை அதிகாரி மீது தாக்குதல், சிறையில் ஏற்பட்ட கலவரம், கண்ணனூர் சிறை வாழ்க்கை, ஆஷ் கொலை, விடுதலை இவை குறித்து விளக்குகிறார். அவர் இறந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னர் 1946ஆம் ஆண்டு இரண்டு பகுதிகளும் சேர்ந்து ஒரே நூலாக வெளிவந்தது.

## வ.உ.சி. உரை எழுதிய நூல்கள்

வ.உ.சி. இன்னிலை, சிவஞான போதம், திருக்குறள் ஆகிய நூல்களுக்கு உரை எழுதி உள்ளார்.

## இன்னிலை-1917

வ.உ.சி. இரத்தினக் கவிராயர் எழுதிய இன்னிலை என்ற நூலுக்கு விளக்க உரை எழுதினார். அந்த நூலைப் படிக்கும் போது அவரது இலக்கணப் புலமையை நாம் அறிந்து கொள்ளலாம்.

## சிவஞானபோதம்-1935

சிவஞானபோதம் ஒரு பக்தி நூலாகும். வ.உ.சி. இந்நூலுக்கு மிகச் சிறந்த விளக்க உரை எழுதியுள்ளார். இந்நூலினை ஆழமாக ஆராய்ச்சி செய்ததில் தத்துவம் மற்றும் பக்தியில் சிறந்தவர் ஆனார். வ.உ.சி. இந்நூலில் மத வேற்றுமை காண்பவர்கள் 'யான், எனது' என்னும் மத வெறி பிடித்தவர்களென்றும் நாடு இருக்கும் ஒற்றுமையற்ற நிலையில் மத வேற்றுமை காண்பது நாட்டு ஒற்றுமைக்குத் தீங்கு ஏற்படுத்தக் கூடியது என்றும் கூறுகிறார். அவர் இந்நூலில் மதங்களின் பொய்யான உயர்வு, தாழ்வு குறித்து ஏதும் எழுதவில்லை.

## திருக்குறள்-1935

பழந்தமிழ் இலக்கியங்களான திருக்குறள், தொல்காப்பியம் இவற்றின் மீது வ.உ.சி.க்கு அளவு கடந்த பற்று உண்டு. அவரது உரை அவரது ஆழ்ந்த இலக்கண அறிவை வெளிப்படுத்துகிறது. அவர் பொருள் கூறும் விதம், பல் வேறு உரைகளை ஒப்பிடும் விதம், அவர் தரும் இலக்கணக் குறிப்புகள் இவற்றின் மூலம் அவர் எவ்வளவு பெரிய மேதை என நாம் அறியலாம்.

## வ.உ.சி.யால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள்

1.திருக்குறள்
(மணக்குடவர் உரையுடன்)-1917
2.தொல்காப்பியம்
(இளம்பூரனார் உரையுடன்)-1928

## வ.உ.சி. எழுதிய கட்டுரைகள்

வ.உ.சி. பல்வேறு தகவல்கள் பற்றி வெவ்வேறு பத்திரிகைகளில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். வ.உ.சி. எழுதிய நூல்கள் பல போதிய நிதி வசதி இல்லாததால் பதிப்பிக்கப் படவில்லை. இப்பொழுது அக்கையெழுத்துப் பிரதிகள் நமக்குக் கிடைக்கவில்லை.

## வ.உ.சி.யின் அரசியல் சொற்பொழிவு

வ.உ.சி. தலைசிறந்த மேடைப் பேச்சாளர். சேலத்தில் நடந்த மூன்றாவது காங்கரஸ் மாநாட்டில் அவர் நிகழ்த்திய தலைமையுரை ‘எனது அரசியல் பெருஞ்சொல்’ என்ற தலைப்பில் அமைந்தது. அது நூலாகவும் வெளிவந்துள்ளது.

## பத்திரிகை ஆசிரியராக வ.உ.சி.

வ.உ.சி. விவேகபானு, இந்து நேசன், தி நேஷனல் போன்ற பத்திரகைகளுக்கு ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

## மொழி பெயர்ப்பாளராக வ.உ.சி.

வ.உ.சி. நான்கு நூல்களை மொழிபெயர்த்துள்ளார்.

அவையனைத்தும் ஜேம்ஸ் ஆலன் என்பவரால் எழுதப்பட்டது. மொழிபெயர்ப்புப் பணி அவ்வளவு எளிதானதல்ல. எளிதாகப் புரிந்து கொள்வதற்காகச் சில வார்த்தை களைச் சேர்த்தும் சில வார்த்தை களைச் தவிர்த்தும் மொழிபெயர்த் துள்ளதாக வ.உ.சி. கூறுகிறார். வ.உ.சி.யின் மொழிபெயர்ப்பு நிறை வானதாகவும் மதிப்பு மிக்கதாகவும் அவரது திறமையை வெளிப் படுத்துவதாகவும் அமைந்துள்ளது. அவை அறத்திற்கு முதன்மை தரக் கூடிய நூல்களாகும்.

## மனம் போல் வாழ்வு-1909

ஜேம்ஸ் ஆலனின் "As a man Thinketh" என்ற நூலை வ.உ.சி. ‘மனம் போல் வாழ்வு’ என்று மொழி பெயர்த்தார்.

## அகமே புறம்- 1914

ஜேம்ஸ் ஆலனின் "Out from the heart" என்ற நூலை வ.உ.சி. ‘அகமே புறம்’ என்று மொழி பெயர்த்தார்.

## வலிமைக்கு மார்க்கம்- 1916

ஜேம்ஸ் ஆலன் எழுதிய "From Poverty to Power" என்ற நூலின் முதல் பகுதி "The part of prosperity" ஆகும். அதனை வ.உ.சி. ‘வலிமைக்கு மார்க்கம்’ என்று மொழி பெயர்த்தார்.

## சாந்திக்கு மார்க்கம்- 1934

ஜேம்ஸ் ஆலன் எழுதிய "From Poverty to Power" என்ற நூலின் இரண்டாம் பகுதி "The way to peace" ஆகும். அதனை வ.உ.சி.

‘சாந்திக்கு மார்க்கம்’ என்று மொழிபெயர்த்தார்.

வ.உ.சி.யின் அரசியல் வாழ்க்கை உயர்ந்த ஒழுக்கமும், நேர்மையும், ஆற்றலும் நிறைந்ததாக இருந்தது. அவர் அன்பு, அச்சமின்மை, வெளிப் படையான குணம் இவற்றை உடையவராக இருந்தார். அவரது குணநலன்களை உலகம் போற்றுகிறது.

Ж

# நட்பு


**ஏ. பொன்னுத்துரை**

முதலாண்டு வேதியியல்துறை


***“முள்ளோடு வளரும்***
***ரோஜாவை யாரும்***
***வெறுப்பதில்லை!***
***அன்போடு வளரும்***
***நட்பை யாரும்***
***மறப்பதில்லை.”***

# கார்மேகம்


**ஜே. பிரேம்குமார்**

முதலாண்டு வேதியியல்துறை


***“உன் அழுகையால்***
***உலகம் சிரிக்கின்றது.***
***உலகம் அழவேண்டுமென்று***
***நீ சிரித்துவிடாதே!”***

Ж

# செஞ்சிலுவைச் சங்கம்


**சே.கற்பகராஜ்**

மூன்றாமாண்டு வணிகவியல் (கணினி) ‘ஆ’ பிரிவு


மனிதநேய முத்திரையோடு உலகளாவிய பல அமைப்புகள் இயங்கி வருகின்றன. இவற்றுக் கெல்லாம் சிகரமாக விளங்குவது செஞ்சிலுவைச் சங்கம். செஞ் சிலுவைச் சங்கத்தை நிறுவியவர் ஜீன்ஹென்றி டுனன்ற் என்பவராவார். இவரின் பிறந்த தினமான மே. 8ஆம் நாள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

1859ஆம் ஆண்டிலே ஆஸ்திரிய சாம்ராஜ்ய படைகளுக்கும், பிரான் ஸின் சார்டீனியா நாட்டுப் படைக ளுக்கும் இடையே வட இத்தாலி யிலுள்ள சோல்பரினோ என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தத்தின் கொடூரத்தைத் தன் கண்களால் கண்டு வேதனை யடைந்த ஜெனீவா நகர இளை ஞரான ஹென்றி டுனன்றுக்கு ஏற்பட்ட எண்ணக் கருவின் பிரதிபலிப்பே இந்தச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகும்.

ஏறத்தாழ 40,000 உயிர்களைக் காவுகொண்ட இப்போரின் விபரீதங் களை உணர்த்த ‘சோல்பரினோவின் நினைவுகள்’ என்ற நூலை எழுதி வெளியிட்ட இவர், அதன் மூலம் கருணை பொங்கும் நெஞ்சங்களை வசமாக்கிச் செஞ்சிலுவைச் சங்கம் உருவாக வேண்டியதன் அவசியத்தை உணரச்செய்தார். இந்த அடிப்படையில் 1863ஆம் ஆண்டு செஞ்சிலுவைச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

எதுவித பாகுபாடுமின்றிப் பாதிக்கப் படுவோருக்கு மனிதநேயத்தோடு உதவி, ஒத்தாசை புரியவேண்டும் எனும் ஆவலினால் உந்தப்பட்டு எங்கெல்லாம் மனிதனுக் குத் துன்பம் நேர்கிறதோ அங்கெல்லாம் நேரில் சென்று பணிபுரிய, பாதிப்பு களைத் தடுக்க அல்லது அவற்றின் பரிமாணத்தைக் குறைக்க தேசிய, சர்வதேச அடிப்படையில் செஞ் சிலுவைச் சங்கம் பாடுபட்டு வருகிறது.

உயிர், உடல், நலம் என்பவற்றைப் பாதுகாப்பதும் மனித கௌரவம் பேணப்படுவதை உறுதி செய்வதுமே இச் சங்கத்தின் பிரதான நோக்கமாகும். அனைத்தின மக்கள் மத்தியிலும் புரிந்துணர்வை வளர்த்து நட்புறவு, கூட்டுறவு என்பவற்றை நிலைபெறச் செய்து நிரந்தர சமாதானத்தைக் கட்டி எழுப்புவதும் அதன் குறிக் கோள்களாகும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பது பிரதானமான ஏழு கொள்கைகளை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டதாகும். அவை, மனிதநேயம், பாரபட்சமின்மை நடு நிலைமை தொண்டர் சேவை, ஒருமைப்பாடு, சுயாதீனம், சர்வதேச மயம் என்பனவாகும்.

செஞ்சிலுவை அமைப்புக்கெனவே தனித்துவமான ஓர் அடையாளம் அமையப்பெற்றுள்ளது. வெண்ணிற பின்னணியில் அமைந்துள்ள செந்நிற சிலுவையே அந்த அடையாளமாகும். ஹென்றிடுனன்ற்டின் பிறந்தகமான ஸ்விட்ஸர்லாந்து நாட்டு தேசியக் கொடியே இச்சின்னம் அமையப் பெற வழி கோலியது. அந்நாட்டு தேசியக் கொடியில் செந்நிற பின்னணியில் அமைந்த வெண்ணிற சிலுவை காணப்படுகிறது. எனவே, ஸ்விஸ்வாசியான ஹென்றி டுனற்க்கு கௌரவம் செலுத்தும் வகை யிலேயே நிறம் மாறி சின்னம் இவ்வாறு அமையப் பெற்றது.

ஜெனீவா உடன்படிக்கை 1864ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட போதே

செஞ்சிலுவைச் சங்கத்துக்கென இந்த அடையாளமும் ஏற்கப்பட்டது.

இந்த அமைப்பினால் மேற்கொள் ளப்படும் சேவையின் பெறுமதியை உணர்ந்த இஸ்லாமிய நாடுகள் விடுத்த வேண்டுகோளின் படி 1876ஆம் ஆண்டில் இதே சேவையின் அடிப்படையில் செம்பிறையை அடையாளச் சின்னமாகக் கொண்ட சங்கம் உருவாக்கப்பட்டது. உலகின் ஏனைய நாடுகளில் செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றிவரும் அதே அரும் பணியையே இஸ்லாமிய நாடுகளில் செம்பிறை என்ற சின்னத்தின் கீழ் இயங்கும் சங்கமும் ஆற்றி வருகிறது.

ஜெனீவா உடன்படிக்கையின் படி, செஞ்சிலுவை அடையாளத்தின் பாவனையாளர்கள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளனர். இதனை ஒரு பாதுகாப்பு அடையாளமாகச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள் கவனிக்க வேண்டும் எனச் சர்வதேச மானிட சட்டங்கள் நிச்சயித்துள்ளன.

பிழையான பாவனையிலிருந்து இந்த அடையாளத்தைப் பாதுகாக்க உரிய சட்டங்கள் 1949ஆம் ஆண்டின் ஜெனீவா உடன்படிக்கையில் பொதிந் துள்ளன. யுத்த தருணங்களின் போது மட்டும் செஞ்சிலுவை அடையாளத்தை இராணுவ சிகிச்சைப் பிரிவுகள் சீருடை மற்றும் சொத்துக்களில் பதிக்க, வைத்தியசாலைகள், சிகிச் சைப் பிரிவுகளால் உபயோகிக்க மட்டும் அனுமதிக்க தீர்மானிக் கப்பட்டுள்ளது. ஓர் அறிகுறியாக உபயோகிக்கப்படும் இந்த அடை யாளம் கொண்ட எந்த மானிடனோ அல்லது பொருளோ செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உரித்தானது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

செஞ்சிலுவை அடையாளத்தைப் பிழையான வழிமுறையில் அல்லது தவறான நோக்கில் பாவிக்கும் எவருக்கும் எதிராகக் குரல் எழுப்புவது ஜெனீவா உடன் படிக்கைக்கு உடன்பாடான அனைத்து நாடுகளினதும் பொறுப் பாகும்.

செஞ்சிலுவைச் சங்கங்கள் உலக நாடுகளில் இன்று பரவலாக வியாப்பித்துள்ளன. எனினும் பல நாடுகளில் செஞ்சிலுவைச் சின்னம் பொதுமக்களாலும் வர்த்தக நிறுவ னங்களிலும் பிழையான வழி முறைகளில் பயன்படுத்தப்படுகின் றன. குறிப்பாக, இது மருந்து விற்பனை நிலையங்களில் வர்த்தக அடையாளமாக தனியார் வைத் தியத்துறையின் இனம் காட்டும்

அடையாளமாக தேசிய மருந்துகள் விற்கும் கடைகளில் வியாபாரச் சின்னமாக இன்றும் பல வழிகளிலும் இந்தச் சின்னம் பாவிக்கப்படுகிறது. மிகவும் புனிதமான ஓர் அமைப்புக்கு மட்டுமே உரித்தான செஞ்சிலுவை அடையாளம் தவறாகப் பயன்படுத் தப்படுவதால் யுத்த தருணங்களின் போதும் ஏனைய அனர்த்த சந்தர்ப் பங்களின் போதும் மானிட உயிர் களுக்கு மாபெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. அதேவேளை செஞ் சிலுவை அமைப்புக்கும் அதன் கொள்கை கோட்பாடு என்பவற்றுக்கும் இது களங்கத்தை ஏற்படுத்தும் செயல் என்பதையும் நாம் உணர வேண்டும்.

மக்கட்பால் அன்பும், கருணையும், இரக்கமும் கொண்ட செஞ்சிலுவை, செம்பிறை சங்கங்களின் பணி மூலம் சமூகப் பிணி தீரவும் அகிலம் எதிர்நோக்கும் ஆயுத அச்சுறுத்தல்கள் அகன்றிடவும் வழிகிட்ட வேண்டும். இதற்கென உலக மானிட இனம் மனத்தாலும் செயலாலும் மதிப்பளிக்க வேண்டும்.

***உலகச் செஞ்சிலுவை தினம் மே,08***

Ж

# புகைப்பிடித்தல்

**ரா. தமிழ்ச்செல்வி**
இரண்டாமாண்டு உயிர்வேதியியல் துறை

உலகளவில் இறப்பிற்கு இரண்டாம் மிகப்பெரிய காரணமாக புகையிலையைப் பயன்படுத்துவது அமைந்துள்ளது. புகைபிடிப்போரில் பாதிக்கும் மேலானவர்கள் புகையிலையுடன் தொடர்புடைய நோய்களினாலேயே இறக்கின்றனர். தவிர இளஞ்சிறார்கள் தங்கள் வீடுகளிலேயே புகைப்பவர்களினால் மாசுபட்ட காற்றைச் சுவாசித்து பாதிக்கப் படுகின்றனர். உலக தொழிலாளர் நிறுவனமும் (ILO) 200,00-க்கும் அதிகமான தொழி லாளர்கள் மற்றவர்கள் விடும் புகையினால் இறப்பதாகக் கூறுகிறது.

இதனால் இந்த ஆண்டு புகையிலை மறுப்பு தினத்தில் 100% புகையில்லாச் சூழல் அமைப்பதே பெண்டிர், சிறார் மற்றும் வேலை யிடத்தில் பிறரை இந்தத் தீமையிலிருந்து காப்பதாக அமை யும் என்று கவனம் செலுத்து கிறார்கள். பொது இடங்களில் நல்ல காற்றோட்டம் ஏற்படுத்துவதோ இல்லை வடிகட்டுவதோ மட்டும் விரும்பத்தக்க அளவிற்குப்

புகையைக் கொண்டுவரமுடியாது என்கின்றனர் உடல்நல நிபுணர்கள்.

1987இல் உலக சுகாதார மன்றம் ஏப்ரல்7, 1988யை உலகப் புகைக்காத நாளாகக் கொண்டாடத் தீர்மானம் நிறைவேற்றியது. பின்னர் 88இல் மீண்டும் மே31 தேதியைப் புகையிலை மறுப்பு தினமாகக் கொண்டாடத் தீர்மானித்தது. புகையிலையால் ஏற்படும் ஆபத்தையும் அவற்றிலிருந்து விடுபடும் வழிகளையும் எடுத்துரைப்பதே இத்தினத்தின் நோக்கம். இன்றைய தினம் பொதுமக்களின் கவனத்திற்குப் புகையிலையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதால் மீளும் நோய்களைப் பற்றியும் எடுத்துக் கூறுகிறோம். மாசில்லாக் காற்றைச் சுவாசிப்பது மனிதருக்கான பிறப்புரிமை. அது புகைபிடிக்கும் சிறு பான்மையினரால் பறிக்கப்படுவது வருந்தத்தக்கது.



புகையிலை நிறுவனங்களின் நூதன வர்த்தக தந்திரங்களும், புகையிலையின் ஆபத்தைக் குறித்த அலட்சிய போக்கும் புகையிலைப் பொருட்களின் கட்டுப் பாடற்ற பயன்பாட்டிற்குக் காரண மாகிறன. உலக சுகாதார நிறுவ னத்தின் தலைமையில் இந்தியா உள்பட 170 உறுப்பு நாடுகள் புகையிலையை முழுமையாகக் கட்டுப்படுத்துவதை லட்சியமாக வைத்து உடன் படிக்கையில் கையெழுத்திட் டுள்ளன.

ஆனால், ஒவ்வொரு உறுப்பு நாடும் உடன்படிக்கையை நிறை வேற்ற எவ்வகையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதைப் பொறுத்துத்தான் இதன் வெற்றி அடங்கியுள்ளது. உடன்படிக்கை யின் ஒரு பகுதியாக மத்திய அரசும் புகையிலைப் பொருட்களின் விற்பனை மற்றும் விளம்பரம் தொடர்பாகச் சில வழிகாட்டு தல்களை அறிவித்துள்ளது. ஆனால், இதில் பொது மக்களின் பங்களிப்பு மிக அவசியமாகும்.

புகையிலைப் பயன்பாட்டை குறித்த அதிர்ச்சிகரமான தகவல் என்னவெனில் இளம் வயதிலேயே புகைப்போரின் எண்ணிகை உயர்ந்து

வருவதாகும். புகைப்பழக்கம் குறித்த சில தகவல்கள்:

புகையிலைப் பொருட்களில் சிக ரெட் முதலிடத்தை வகிக்கிறது.

சிகரெட்டில் நான்காயிரம் வேதிப் பொருட்கள் கலந்துள்ளன. இவற்றில் 43 வேதிப்பொருட்கள் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியவை.

உலக அளவில் ஆறு விநாடிக்கு ஒருவர் புகைப்பிடிப்பதால் மரணத்தைத் தழுவுகிறார்.

ஆண்டிற்கு 60 லட்சம் பேர் சிகரெட் உள்ளிட்ட புகையிலை தயாரிப்புகளால் உயிரைத் துறக் கின்றனர்.

2030ஆம் ஆண்டிற்குள் இந்த எண்ணிக்கை ஒரு கோடியாக உயரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

வளரும் நாடுகளைச் சார்ந்தோர் 70 சதவீதம் பேர் இதில் அடங்குவர்.

10 சிகரெட் பிடிப்பவர் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட நச்சுப் பொருளை உட்கொண்டு வெளி யிடுகிறார். இவரால் இவரது மனைவி, குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர்.

பியூட்டேன், காட்மியம், ஸ்டியரிக் ஆசிப், அம்மோனியா, நாப்தலமைன், போலோனியம் உட்பட வேதிப் பொருட்கள் சிகரெட் புகையில் உள்ளன. இவை வெடிகுண்டு, பூச்சிக்கொல்லி மருந்து போன்றவற்றைத் தயாரிக்கப் பயன்படுபவை என்பது குறிப்பிடத் தக்கது.

புகைப்பழக்கம் அனைத்து உறுப்புகளையும் பாதிக்கிறது. மாரடைப்பு, நுரையீரல் நோய், புற்றுநோய், சர்க்கரை, பக்கவாதம், தமனிச்சுருக்கம் (குறிப்பாக கால், கை, தமனிகள் அடைப்பு), ரத்தக் கொதிப்பு ஆகியன ஏற்படுகின்றன. புகைபிடிப்போருக்கு மாரடைப்பால் இள வயதிலும் மரணம் ஏற்படலாம்.

இது இருதய துடிப்பையும், ரத்தக் கொதிப்பையும் கூட்டுகிறது. மூக்குப் பொடி, புகையிலை உண்பது, பீடி புகைப்பதும் சிகரெட்டுக்குச் சமமா னதே. ஆண்களுக்கு மலட்டுத் தன்மையும், வீரியக்குறைவும் ஏற்பட வாய்ப்புள்ளது. புகைப்பிடிப்போரின் குழந்தைகளுக்குச் சளி, இருமல், மூச்சுத் திணறல் ஏற்படலாம்.

சிகரெட் போன்ற புகையிலைப் பொருளில் புற்றுநோயை உற்பத்தி

செய்யும் நச்சுப் பொருட்கள் உள்ளன. இவை வாய், தொண்டை, மூச்சுக்குழாய், உணவுக் குழாய், சிறுநீரகப் பாதை வரை எங்கு வேண்டுமானாலும் புற்றுநோயை ஏற்படுத்தும்.

நுரையீரல் நோய், புற்றுநோய் ஏற்படக் காரணம் புகைபிடிப்பதே.


உலக மக்கள் தொகையில் ஆஸ்துமா 15 சதவீத மக்களையும், சி.ஓ.பி.டி., என்ற இளைப்பு நோய் ஐந்து சதவீத மக்களையும் பாதித்துள்ளது. இதற்குப் புகைப்பிடிப்பதும் காரணம்.

சிகரெட் புகைப்பதால் நுரையீரல், 30 வயதில் 60 வயதுக்குரிய தன்மையுடன் செயல்படும்.

புகையிலை தொடர்பான சிகரெட், பீடி போன்றவற்றை வாங்க தினமும் குறைந்தது 20 ரூபாய் செலவழிக்க வேண்டியுள்ளதால், பொருளாதார பாதிப்பும் ஏற்படுகிறது.

**புகைப்பதை நிறுத்தினால் ஏற்படும் நன்மைகள்:**

- *20நிமிடங்களில் ரத்த அழுத்தம் குறைகிறது.*
- *எட்டு மணி நேரத்தில் ரத்தத்தில் கார்பன் மோனாக்சைடு குறைகிறது.*
- *48மணி நேரத்தில் மாரடைப்பு வரும் தன்மை குறைய*



*துவங்கும்.*

- *72மணி நேரத்திற்குப் பின்னர் மூச்சுக்குழல் சுத்தமாகிறது.*
- *மூன்று முதல் ஒன்பது மாதங்களில் இருமல், சளி பிரச்சினை குறைகிறது.*
- *ஓர் ஆண்டுக்குப் பின் மாரடைப்பு வரும் வாய்ப்பு பாதியாக குறைகிறது.*
- *10ஆண்டுகளுக்குப் பின் நுரையீரல் புற்றுநோய் வரும் வாய்ப்பு அறவே இல்லாமல் போகிறது.*

***உலகப் புகையிலைமறுப்பு தினம் மே,31***

Ж

## வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியவை - 01

**டி. கௌதமன்**
முதலாண்டு வேதியியல் துறை

எப்போதும் இருக்க வேண்டியது –
பிறரைப் பாராட்டும் குணம்.
எப்போதும் இருக்கக் கூடாதது –
பிறரைக் குறைகூறும் குணம்.
இழக்க வேண்டியவை –
தீய பழக்கங்கள்.
இழக்கக் கூடாதவை –
நல்ல பழக்கங்கள்.

# Escherichia coli

***D. Depa***, **II[nd] B.Sc. Biotechnology**

*E.coli* is a common type of bacteria that can get into food, like beef and vegetables. *E. coli* is short for the medical term *Escherichia coli*. The strange thing about these bacteria — and lots of other bacteria — is that they're not always harmful to you.

*E.coli* normally lives inside your intestines, where it helps your body break down and digest the food you eat. Unfortunately, certain types (called strains) of*E. coli* can get from the intestines into the blood. This is a rare illness, but it can cause a very serious infection.

Someone who has *E. coli*infection may have these symptoms: bad stomach cramps and belly pain, vomiting , diarrhea, sometimes with blood in it.


One very bad strain of *E. coli*was found in fresh spinach in 2006 and some fast-food hamburgers in 1993.

Ж

# John Keats

V.S. Palanivel, Ist B.A. English


John Keats's literary career amounted to just three and a half years. It began in July 1816 after he passed the apothecaries' examination at Guy's Hospital and lasted until late 1819.




Keats wrote 150 poems, but those upon which his reputation rests were written in the span of nine months, from January to September 1819. This intense flowering of talent remains unparalleled in literary history.

Keats published three books of verse in his lifetime. The first volume, *Poems*, was published by C and J Ollier in March 1817. It was dedicated to Leigh Hunt and contained thirty-one works, including 'Sleep and Poetry' and 'on first looking into Chapman's *Homer*'. His second volume, *Endymion*, was published by Taylor and Hessey in April 1818. It was savagely reviewed and sold poorly. His third volume, *Lamia, Isabella, the Eve of St Agnes, and Other Poems*, was published by Taylor and Hessey in June 1820. It contained thirteen works,

**The first line of 'To Autumn'**



"Season of mists and mellow fruitfulness,

Close bosom-friend of the maturing sun;

including the great odes of 1819 (though not the 'Ode on Indolence') and 'Hyperion'.

'To Autumn' is perhaps Keats's most famous and beloved work. It is considered the perfect embodiment of poetic form, intent, and effect. It was written in Winchester on 19 September 1819 and first published in 1820. Keats described the feeling behind its composition in a letter to his friend Reynolds, 'Somehow a stubble plain looks warm - in the same way that some pictures look warm - this struck me so much in my sunday's walk that I composed upon it.'

*சரித்திரக்கட்டுரை - 05*

# ஆக்ரா கோட்டை

இது இந்தியாவின் ஆக்ராவில் உள்ள முகலாயர் காலத்துக் கோட்டை ஆகும். இது இந்தியாவில் உள்ள கோட்டைகளில் மிகுந்த முக்கியத்துவம் பெற்ற ஒரு கோட்டையாகும். பெரும் முகலாயப் பேரரசர்களான பாபர், உமாயூன், அக்பர், செகாங்கீர், சாஜகான், ஔரங்கசீப் போன்றவர்கள் இக் கோட்டையில் வாழ்ந்துள்ளார்கள். இங்குதான் மிகப்பெரிய நிதிக் கருவூலமும், நாணயத் தயாரிப்பிடமும் உள்ளது. இக் கோட்டை, 'லா கிலா', 'ஆக்ராவின் செங்கோட்டை' போன்ற பெயர்களாலும் அழைக்கப் படுகின்றது. இது உலகப் புகழ் பெற்ற நினைவுச் சின்னமான தாஜ்மகாலுக்கு வட கிழக்கில் 2.5 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. வெளிநாட்டுத் தூதர்கள், பயணிகள், உயர் அலுவலர்கள் போன்று இந்திய வரலாற்றை உருவாக்கிய பலரும் இந்தக் கோட்டையில் காலடி பதித்துள்ளனர்.

தொடக்கத்தில், ஒரு செங்கற் கோட்டையாக இருந்த இது சிக்கார்வார் ராசபுத்திரர்களுக்கு உரியதாக இருந்தது. கிபி 1080ல், காசுணவைதியப் படைகள் இதனைக் கைப்பற்றியது தொடர்பிலேயே இதனைப் பற்றிய முதலாவது குறிப்புக்கள் கிடைக்கின்றன. சிக்கந்தர் லோடி (கிபி 1487 - 1517) என்னும் டெல்லி சுல்தானே முதன் முதலாக ஆக்ராவுக்குத் தனது இருப்பிடத்தை மாற்றி இந்தக் கோட்டையில் வாழ்ந்தார். இவர் இங்கிருந்தே நாட்டை ஆண்டதனால் ஆக்ரா

நாட்டின் இரண்டாவது தலைநகரம் என்னும் சிறப்பைப் பெற்றது. 1517 ஆம் ஆண்டில் சிக்கந்தர் லோடி இந்தக் கோட்டையிலேயே இறந்தார். பின்னர் இவரது மகனான இப்ராகிம் லோடி 1526 ஆம் ஆண்டில் பானிப்பட் போரில் இறக்கும் வரை ஒன்பது ஆண்டுகள் இங்கு வாழ்ந்தார். இவரது காலத்தில் பல அரண்மனைகளும், கிணறுகளும், மசூதிகளும் இக் கோட்டையுள் கட்டப்பட்டன.

பின்னர் இக் கோட்டையையும், பெருமளவு செல்வத்தையும் முகலாயர் கைப்பற்றினர். இவற்றுள் பின்னர் கோகினூர் என்று பெயர் பெற்ற விலைமதிப்பற்ற வைரமும் அடங்கும். முகலாயப் பேரரசர் பாபர் இங்கே, இப்ராகிமின் அரண்மனையில் தங்கியிருந்தார். 1530 ஆம் ஆண்டில் உமாயூன் இந்தக் கோட்டையிலேயே முடிசூட்டப்பட்டார். உமாயூன் 1530 ஆம் ஆண்டில் ஆப்கானிய சேர் சா வினால் தோற்கடிக்கப்பட்ட பின்னர் சேர் சா இதை ஆறு ஆண்டுகள் வைத்திருந்தார். 1556 ஆம் ஆண்டு மீண்டும் முகலாயர் இதனைக் கைப்பற்றினர்.

அக்ராவின் அமைவிட முக்கியத்துவத்தை உணர்ந்த அக்பர் இதனைத் தனது தலைநகரமாக்கினார். அப்போது செங்கற்களாலான இக் கோட்டை சிதைந்த நிலையில் இருக்கவே அக்பர், அதனைச் சிவப்பு மணற்கற்களைக் கொண்டு புதுப்பித்துக் கட்டினார். உட்பகுதி செங்கற்களாலும், வெளி மேற்பரப்புக்கள் சிவப்புச் மணற்கற்களாலுமான இக் கோட்டை யைக் கட்டுவதில் 1,444,000 ஆட்கள் ஈடுபட்டு 1573 ஆம் ஆண்டில் கட்டி முடித்ததாகச் சொல்லப்படுகிறது.

அக்பரின் பேரனான பேரரசன் சாஜகானின் காலத்திலேயே இக்கோட்டை இன்று காணப்படும் நிலையை எய்தியது. சாஜகான் இங்கே கட்டிய கட்டிடங்கள்



பெரும்பாலும் வெள்ளைச் சலவைக் கற்களினால் ஆனவை. இக் கோட்டைக்குள் முன்னர் இருந்த கட்டிடங்கள் சிலவற்றை இடித்துப் புதிய கட்டிடங்களையும் சாஜகான் கட்டினார். சாஜகானின் இறுதிக் காலத்தில் அவரது மகன் ஔரங்கசீப்பினால் அவர் இக் கோட்டையிலேயே சிறை வைக்கப் பட்டிருந்தார்.

இக் கோட்டை அரைவட்ட வட்டத் தள வடிவம் கொண்டது. இந்த அரை வட்டத்தின் நாண் ஆற்றுக்கு இணையாக இருக்குமாறு கட்டிடம் அமைந்துள்ளது. இக் கோட்டை மதில் 70 அடிகள் உயரமானது. வட்ட வடிவமான பெரிய காவலரண்கள் சீரான இடைவெளிகளில் அமைந்துள்ளன.

நான்கு பக்கங்களிலும் நான்கு நுழைவாயில்கள் உள்ளன. 'கிசுரி' வாயில் எனப்படும் வாயில் ஆற்றை நோக்கியுள்ளது. நான்கு வாயில்களுள், 'டில்லி வாயில்', 'லாகூர் வாயில்' என அழைக்கப்படும் இரண்டு வாயில்கள் குறிப்பிடத்தக்கவை.

லாகூர் வாயிலை, அமர்சிங் ராத்தோரின் பெயரைத் தழுவி 'அமர்சிங் வாயில்' எனவும் அழைப்பதுண்டு. இது முன்னர் 'அக்பர் வாயில்' என அழைக்கப்பட்டது. பிரித்தானியர் இப் பெயரை 'அமர்சிங்' வாயில் என மாற்றினர்.

இந்தியாவின் கட்டிடக்கலை வரலாற்றைப் பொறுத்தவரை இக் கோட்டை மிகவும் முக்கியமானது. வங்காளம், குசராத் போன்ற பகுதிகளுக்குரிய கட்டிடக்கலைப் பாணிகளில் கட்டப்பட்ட 500 கட்டிடங்கள் கோட்டைக்குள் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

இவற்றுள் சில அக்பரால் தனக்கெனக் கட்டப்பட்ட வெள்ளைச் சலவைக்கல் அரண்மனைகளைக் கட்டுவதற்காக இடிக்கப்பட்டது. மேலும் பல 1803 ஆம் ஆண்டுக்கும், 1862 க்கும் இடையில், பாசறைகளை அமைப்பதற்காகப் பிரித்தானியரால் இடிக்கப்பட்டன.

தற்போது முப்பது வரையான முகலாயர் கட்டிடங்களே எஞ்சியுள்ளன. இவற்றுள், டில்லி வாயில், அக்பர் வாயில், வங்காள மகால் எனப்படும் இரு அரண்மனை என்பவை அக்பர் காலக் கட்டிடங் களுக்குச் சான்றாக நிற்கின்றன.

**ஆக்ராக் கோட்டைக்குள் அமைந்துள்ள கட்டிடங்களும் இடங்களும் பின்வருமாறு:**

*அங்கூரி பாக் - வடிவவியல் வடிவங்களைக் கொண்டு அமைந்த பூங்கா.*

*திவான்-இ-ஆம் (பொது மக்களைச் சந்திக்கும் மண்டபம்)- பொதுமக்களைச் சந்திப்பதற்கும் அவர்கள் குறைகளைக் கேட்பதற்கும் இம் மண்டபம் பயன்பட்டது. ஒரு காலத்தில் மயிலணை இங்கேயே இருந்தது.*

*திவான்-இ-காசு - அரசர்களையும், பிற சிரப்பு விருந்தினர்களையும் வரவேற் பதற்காக இம்பண்டபம் பயன்பட்டது. செகாங்கீரின் கருப்பு அரியணை இங்கேயே வைக்கப்படிருந்தது.*

*பொன் மண்டபங்கள் - வங்காளக் குடிசைகளின் வடிவில் அமைக்கப்பட்ட கூரைகளைக் கொண்ட மண்டபங்கள்.*

*செகாங்கீர் மகால் - மகன் செகாங்கீருக்காக அக்பரால் அமைக்கப் பட்டது.*

*காசு மகால் - வெண் சலவைக்கல் அரண்மனை. சலவைக்கலில் வரையப் பட்ட ஓவியங்களைக் கொண்டது.*

*முசாமன் கட்டிடம் - ஒரு பெரிய எண்கோண வடிவக் கோபுரம். இதன் ஒரு உப்பரிகை தாஜ்மகாலை நோக்கியுள்ளது.*

*நகினா மசூதி - அரண்மனை மகளிருக்காகக் கட்டப்பட்ட மசூதி.*

*செனானா மினா சந்தை - பெண்களுக்கானது. பெண் வணிகர் கள் மட்டுமே பொருட்கள் விற்கலாம்.*

*நௌபத் கானா (முரசு இல்லம்) - அரசனின் இசைக்கலைஞர் இசைத்த இடம்.*

*ரங் மகால் - அந்தப்புரம். அரசனின் மனைவிகளும், பிறமகளிரும் வாழ்ந்த இடம்.*

*சாகி கட்டிடம் - சாஜகானின் தனிப்பட்ட மண்டபம்.*

*சாஜகானி மகால் - கட்டிடங் களுக்கு சிவப்பு மணற்கற்களுக்குப் பதில் சலவைக்கற்களைப் பயன்படுத் துவதற்கான முதல் முயற்சி.*

*சீசு மகால் (கண்ணாடி மாளிகை) - அரச உடை அணியும் அறை.*

**நன்றி : தமிழ்விக்கிபீடியா.**

தனிச்சுற்றுக்கு மட்டும்



Vidiyal-37 May2012

சன் பிரிண்டர்ஸ் - தி.கோடு, செல்: 97500 20222